# நாடுமுழுவதும் 100 கோடி மரக்கன்று நட மத்திய அரசு திட்டம்: அமைச்சர் பேச்சு

**கோவை, மே 27 –**

'' அடுத்த, 10 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் 100 கோடி மரக்கன்றுகளை நட வேண்டும் என்ற இலக்கை, ஐ.நா.,சபை நிர்ணயித்துள்ளது. நாம், ஆளுக்கு ஒரு மரம் நட்டாலே, இலக்கை அடைந்து விடலாம்,'' என, மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜாவேத்கர் பேசினார்.

கோவை ஈஷா பசுமை கரங்கள் அமைப்பு, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 50 லட்சம் மரக்கன்றுகள் நட திட்டமிட்டுள்ளது. இதன் துவக்க விழா, பீளமேட்டில் உள்ள ஈஷா பசுமை கரங்கள் நர்சரியில் நேற்று நடந்தது.

இத்திட்டத்தை துவக்கி வைத்த மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவேத்கர் பேசியதாவது:

ஐ.நா.சபை, 10 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் 100 கோடி மரக்கன்றுகளை நட வேண்டும் என்ற இலக்கை நிர்ணயம் செய்துள்ளது. நம்நாட்டில் 125 கோடி மக்கள் உள்ளனர். ஆளுக்கு ஒரு மரம் நட்டாலே, இலக்கை எளிதாக அடைந்து விடலாம்.

மரம் நடும் திட்டத்தை, இயக்கமாக செயல்படுத்த மத்திய சுற்றுச்சூழல் துறை திட்டமிட்டுள்ளது. பிளாஸ்டிக் கழிவுகளால் இந்தியாவின் சுற்றுச்சூழல் வெகுவாக பாதிக்கபட்டுள்ளது.

தினமும், 15 ஆயிரம் டன் பிளாஸ்டிக் கழிவுகள் உருவாகின்றன. இதில், 5,000 டன் கழிவுகள் மாணவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் சேகரிக்கப்படுகின்றன. தூய்மையான இந்தியாவை உருவாக்குவதுதான் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் முக்கிய நோக்கம்.

இவ்வாறு, பிரகாஷ் ஜாவேத்கர் பேசினார்.

நிகழ்ச்சியில், ஈஷா மைய நிர்வாகிகள் சுவாமி பிரபோதா, ஏகா, மற்றும் பா.ஜ., மாநிலச் செயலாளர் வானதி சீனிவாசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.




■ 'ஈஷா பசுமைக் கரங்கள்' சார்பில், கோவை பீளமேட்டில் உள்ள ஈஷா நாற்றுப்பண்ணையில், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர், பிரகாஷ் ஜாவேத்கர் மரக்கன்று நட்டார். அருகில், வானதி சீனிவாசன் உள்ளிட்டோர்.